# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 14

| | | | |
|---|---|---|---|
| Name | : கற்பகம் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of January 2025.

(Accused present. Accused advocate present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது சென்னை பெருநகர காவல் துறையில் மயிலாப்பூர் மாவட்டத்தில் கோட்டுர்புற குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.08.2017 அன்று பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேற்படி காவல் நிலைய குற்ற எண்.07/2016, இதச பிரிவுகள் 417, 376, 506(i) -ன் கீழான வழக்கினை எனது மேல்புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பை பார்வையிட்டதில் முன்பிருந்த காவல் ஆய்வாளர் அவர்கள் புலன் விசாரணைக்குப்பின் பாதிக்கப்பட்ட பெண் அவருடைய பிறந்த பெண் குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் பெற வேண்டியும் மற்றும் பாதிக்கப்பட்ட பெண் எதிரி செல்வன் அவர்களுக்கு பிறந்த குழந்தைக்கும் DNA பரிசோதனை செய்ய வேண்டியும் இருந்ததால் நான் மேற்படி பெண் குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வேண்டி WPC 638 சுமதி என்பவர் மூலம் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிறப்பு சான்றிதழ் பெற்றேன்.

2. மேலும் பாதிக்கப்பட்ட பெண், எதிரி செல்வன் அவர்களுடைய குழந்தை ஆகியோருக்கு DNA பரிசோதனை கார்டு வேண்டி வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் பெற்று WPC 999 இந்துமதி என்பவர் மூலமாக சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு மேற்படி கடிதத்தின்பேரில் DNA கார்டு

பெறப்பட்டு 04.01.2018 அன்று பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் WPC 999 இந்துமதி என்பவர் மூலமாக பாதிக்கப்பட்ட பெண், எதிரி, அவர்களுடைய பெண் குழந்தை ஆகியோர்களுக்கு DNA பரிசோதனை செய்யப்பட்டது.

3. மேற்படி பரிசோதனை செய்யப்பட்ட இரத்த மாதிரிகளை சீல் செய்யப்பட்டு காவலர் WPC 999 இந்துமதி என்பவர் மூலமாக ஒப்புவிக்கப்பட்டதை மேற்படி காவலர் 05.01.2018 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தார்.

4. பின்னர் மேற்படி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வு செய்த மருத்துவர் திலகவதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி பாதிக்கப்பட்ட பெண், எதிரி ஆகியோர்களின் பெண் குழந்தை DNA ஆய்வறிக்கையை பெற்றேன். மேற்படி எதிரிக்கும் அசா 1க்கும் பிறந்த பெண் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் **அசாஆ 11** ஆகும்.

5. மேற்படி வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் சாட்சிகள், பெண் காவலர்கள், மருத்துவர்கள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 417, 376, 506(i)ல் இருந்து இதச பிரிவுகள் 417, 506(i) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அசாஆ 12** ஆகும்.

6. இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 417, 506(i) -ன் கீழ் 26.04.2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனது புலன் விசாரணையின் அடிப்படையில் எதிரி அசா 1க்கு கட்டாய உடலுறவு செய்யவில்லை என்று தெரிய வந்ததால் இதச பிரிவு 376 ஐ நீக்கம் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அரசு மருத்துவர் பேரானந்தம் 30.08.2016 அன்று தாக்கல் செய்த அறிக்கையில் எதிரியின் வலது கையில் மச்சம் உள்ளதாக குறிப்பிடப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் மேற்படி அறிக்கையை பெறவில்லை மேற்படி மருத்துவரை விசாரிக்கவில்லை.

2. இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு 21.08.2017 அன்று எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். DNA பரிசோதனை அறிக்கை எனது கைக்கு என்று கிடைத்தது என்றால் மேற்படி தேதியை நான் குறித்துக்கொள்ளவில்லை.

3. 11.04.2018 அன்று நீதிமன்றத்தில் DNA பரிசோதனை அறிக்கையை Top priority கொடுத்து பெற்றுத்தருமாறு வேண்டுகோள் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு தடய அறிவியல் ஆய்வகம், சென்னையில் இருந்து ஏற்கனவே மேற்படி அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டதாக நான் அனுப்பிய காவலரிடம் தெரிவித்துள்ளார்கள்.

4. 28.12.2017 அன்று இந்நீதிமன்றத்தில் இருந்து பொள்ளாச்சி மருதுவமனைக்கு FTA கார்டுகள் கொடுக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடித்தின்பேரில் FTA கார்டுகள் 04.01.2018 அன்று கிடைக்கப்பெற்றது.

5. பாதிக்கப்பட்ட பெண், அவருடைய பெண்குழந்தை மற்றும் மேற்படி குழந்தையின் தகப்பனார் ஆகியோருக்கு இரத்த மாதிரிகள் சேகரம் செய்வதற்கு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு 04.01.2018 அன்று அனுப்பப்பட்டுள்ளார்கள். அவ்வாறு நான் கூறுவது தவறு என்றாலும் பாதிக்கப்பட்ட பெண், அவருடைய பெண்குழந்தை மட்டுமே 04.01.2018 அன்று அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றாலும் எதிரி 02.01.2018 அன்றே அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல.

6. இரத்த மாதிரிகளை சேகரம் செய்த மருத்துவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண், அவருடைய பெண்குழந்தை மற்றும் மேற்படி குழந்தையின் தகப்பனார் ஆகியோரை ஒரே நாளில் இரத்த மாதிரிகள் சேகரம் செய்வதற்கு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு நான் அனுப்பி வைக்கவில்லை என்றாலும் எனவேதான் மேற்படி இரத்த மாதிரிகளை சேகரம் செய்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. 12.04.2018 அன்று மருத்துவர் திலகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதவு செய்துள்ளேன். அதற்கு முந்தைய தேதியிலேயே DNA பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்திற்கும் காவல் நிலையத்திற்கும் அனுப்பிவிட்டதாக சென்னை தடய அறிவியல் ஆய்வவகத்தில் கூறியதால் 12.04.2018 அன்று நான் நேரில் சென்னைக்கு சென்று மேற்படி திலகா என்பவரை விசாரித்தேன்.

8. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரி இவ்வழக்கில் தவறாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. சரிவர புலன்

விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.